**மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2020 ஆம் ஆண்டின் இந்த முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 2020 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு மேன்மேலும் அமைதியையும், வளத்தையும், வளர்ச்சியையும் வழங்கும் என்றும் நான் வாழ்த்துகிறேன்.

2) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் உறுதியோடு பீடுநடை போட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு, ஏழை, எளியோர்

மற்றும் நலிவுற்றோர் நலனைப் பாதுகாப்பதில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. நல் ஆளுமை நாளான 25.12.2019 அன்று, மத்திய அரசால் முதன்முறையாக வெளியிடப்பட்ட நல் ஆளுமைத் திறனுக்கான குறியீட்டுப் பட்டியலில், நாட்டில் உள்ள 18 பெரிய மாநிலங்களில், ஒட்டுமொத்தத் தரவரிசையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க சாதனையாகும். மேலும், 'இந்தியா டுடே' பத்திரிகை நவம்பர் 2019 இல் 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்விலும் 'ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க மாநிலம்' என்று தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த, மிகவும் பெருமைக்குரிய சாதனைகளுக்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலம் ஆக்க வேண்டும் என்ற, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் குறிக்கோளினை இந்த அரசு அடைந்துள்ளது.

3) தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு, இந்த அரசு. 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல், ஆளுநர் உரைகளில் அறிவிக்கப்பட்ட 105 அறிவிப்புகளில், 73 அறிவிப்புகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு, மீதமுள்ள அறிவிப்புகள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், விதி எண் 110 இன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை 453 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அவற்றில், 114 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 303 அறிவிப்புகளுக்குத் தேவையான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவையும் விரைவில் நிறைவு செய்யப்படும். இந்த அரசு, அனைத்து அறிவிப்புகளையும் திறம்படச் செயல்படுத்தி வருவதை இது தெளிவாக்குகிறது.

4) பன்னெடுங்காலமாக அடித்தள மக்களாட்சி உணர்வு தமிழ்நாட்டுப் பாரம்பரியத்தில் இரண்டறக் கலந்துள்ளது. பல்வேறு தடைகள் வந்தபோதிலும், 27 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் முறையாக நடத்தப்படுவதை இந்த அரசு உறுதி செய்தது. மீதமுள்ள 9 மாவட்டங்களிலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரைவாக தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. இந்தச் செயல்பாடு, மக்களாட்சியைப் பரவலாக்குவதில் இந்த அரசுக்கு உள்ள முனைப்பினை எடுத்துக்காட்டுகிறது.

5) மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்ந்து திறம்பட நிலைநாட்டப்பட்டதன் விளைவாக, நல் ஆளுமைக் குறியீட்டின் ஒரு பகுதியான நீதித்துறை மற்றும் பொதுப் பாதுகாப்புக் கூறுகளில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளது. 'மாநிலங்களின் நிலை' என்ற தலைப்பில் 'இந்தியா டுடே' மேற்கொண்ட ஆய்விலும், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் நாட்டிலேயே

‘சிறந்த செயல்திறன் மிக்க மாநிலம்’ என்ற தரநிலையை தமிழ்நாடு பெற்றுள்ளது. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அருள்மிகு அத்திவரதர் திருவிழா, திருவண்ணாமலை கார்த்திகை தீபம் மற்றும் தேவர் ஜெயந்தி போன்ற பல பெரிய நிகழ்வுகள் அனைத்தும், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. சரியான நேரத்தில் உடனடியாக எடுக்கப்பட்ட தடுப்பு மற்றும் தீர்வு நடவடிக்கைகளினால் மாநிலம் அமைதியாகவும், அசம்பாவிதங்கள் ஏதுமின்றியும் காக்கப்படுகின்றது.

6) கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில், மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கும், சீனக் குடியரசின் அதிபர் மேதகு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும் இடையேயான இரண்டாவது இந்திய–சீன அரசுமுறைசாராத உயர்நிலை சந்திப்பு மாமல்லபுரத்தில் நடைபெற்றது. உள்ளூர் மக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி அச்சந்திப்பு சுமூகமாக நடப்பதை

உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விரிவான பாதுகாப்பு மற்றும் பிற ஏற்பாடுகள், பரவலான பாராட்டுகளைப் பெற்றன. மாமல்லபுரம் சுற்றுலா மேம்பாட்டிற்கு உதவி செய்ய மாண்புமிகு பாரதப் பிரதமர் உறுதியளித்துள்ள நிலையில், **563.50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான திட்டம் தீட்டப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அனுமதியை விரைவாக வழங்கிட மத்திய அரசினை நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் சகோதர மாநிலமாக சீனாவின் பியூஜியன் மாநிலத்தோடும், சென்னையின் சகோதர நகரமாக குவான்சூவோ நகரத்தோடும் தொடர்புகளை ஏற்படுத்திட இச்சந்திப்பின்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சீனாவிலிருந்து ஒரு உயர்மட்டக் குழுவும் சமீபத்தில் சென்னைக்கு வந்தது.

7) இந்த அரசு திறமையான நிதி மேலாண்மைக்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது. பல்வேறு சவால்கள் இருந்தபோதிலும், நிதிநிலை

வரம்புகள் மீறாமல் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதி குறைந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை, பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் அதிகரித்துத் தந்துள்ளன என்ற பரவலான கருத்து உள்ள நிலையில், மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் மொத்த நிதியளவு குறைந்துள்ளது என்பதே உண்மை நிலவரமாகும். மேலும், பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைத்த, மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வு வழிமுறை தமிழ்நாட்டிற்கு மேலும் அதிக அளவிலான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

8) பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளை தமிழ்நாடு மிகவும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளது. இந்த அரசு, நிதிக்குழு முன்பு தனது கருத்துகளை விளக்கமாகச் சமர்ப்பித்துள்ள நிலையில், மாநில அரசுகளின் செயல்திறனையும் செயல்பாட்டையும்

ஊக்குவிக்கும் வகையில், நியாயமான மற்றும் சமமான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற நம்பிக்கையுடன் உள்ளது.

9) தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு, இதுவரை பொருட்கள் மற்றும் சேவை வரி இழப்பீடாக 7,096 கோடி ரூபாயை பெற்றுள்ளது. மேலும், மத்திய அரசின் மானியமாக, 17,957.31 கோடி ரூபாய் இந்த ஆண்டில் இதுவரை பெறப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டிற்கான நிலுவைத் தொகைகளை விடுவிப்பதில் நிலவி வரும் சில சிக்கல்களைக் களைந்து நிலுவைத் தொகையினைப் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொருட்கள் மற்றும் சேவை வரியை நடைமுறைப்படுத்திய முதலாவது ஆண்டில், அதாவது 2017–18 ஆம் ஆண்டில், பல்வேறு மாநிலங்களில் வசூலிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவை வரியில், ஒதுக்கீடு செய்யப்படாத தொகையான 88,344.22 கோடி ரூபாயிலிருந்து 50 சதவீதத்தை, மாநில பொருட்கள் மற்றும் சேவை வரி வசூல்

அடிப்படையில் வழங்குவதற்குப் பதிலாக, மத்திய அரசு தனது தொகுப்பு நிதிக்கு தவறாக எடுத்துச் சென்றுவிட்டது. மேலும், பதினான்காவது நிதிக் குழுவின் நிதிப்பகிர்வு முறையின்படி, இத்தொகையில் 42 சதவீதம் மட்டுமே மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்நாட்டிற்கு 4,073 கோடி ரூபாய் நிகர இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலுவைத் தொகையை நமது மாநிலத்திற்கு விரைவாக விடுவிக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு எடுத்த தொடர் முயற்சியின் பலனாக, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, பொருட்கள் மற்றும் சேவை வரி மன்றத்தால் அமைச்சர்கள் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையில், சாதகமான முடிவை விரைவாக நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாநிலங்களின் நலன்களை முறையாகப் பாதுகாப்பதில் மிகுந்த முனைப்பினைக் காட்டும் இந்த அரசு, பல்வேறு மன்றங்களிலும், உயர்மட்ட நிலையிலும், இத்தகைய பிரச்சினைகள் தொடர்பான தனது கருத்தினை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகளை விரைவில் விடுவிக்குமாறு மத்திய அரசை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

10) மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டின் நலனை உறுதியுடன் பாதுகாப்பதற்காக இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. கர்நாடக அரசால் மேக்கே தாட்டு திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நிராகரித்து உடனே திருப்பியனுப்பவும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு அரசின் முன் அனுமதியின்றி கர்நாடகாவிலுள்ள காவேரி வடிநிலப் பகுதியில் எந்த கட்டுமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் தடுத்து நிறுத்துவதை உறுதி செய்யவும், மத்திய அரசை மீண்டும் ஒருமுறை இந்த அரசு வலியுறுத்துகிறது. பெண்ணையாற்றுப் படுகையில் உள்ள மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது. மறைந்த முதலமைச்சர்

ஜெ ஜெயலலிதா அவர்கள், 2012 ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதி, கர்நாடகாவில், பெண்ணையாற்றில் நீர்த்தேக்கம் அமைப்பதற்கோ அல்லது நீரோட்டப் பாதையை மாற்றி அமைப்பதற்கோ தனது கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தார். இது சம்பந்தமாக மத்திய அரசிடம் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தப்பட்டு, இறுதியில் 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் அடிப்படையில், 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்சினைகள் சட்டத்தின் கீழ், பெண்ணையாறு விவகாரம் குறித்து தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு கோரியுள்ளது. இது தொடர்பான அசல் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. இதற்கான தீர்ப்பாயத்தை விரைவில் அமைக்குமாறும், தமிழ்நாடு அரசின் ஒப்புதலின்றி பெண்ணையாற்றின் வடிநிலப் பகுதிகளில் நீர்த்தேக்கப் பணிகள் அல்லது

நீரோட்டப் பாதையை மாற்றியமைக்கும் எந்த ஒரு கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தும்படியும், மத்திய அரசிடம் இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**11)** பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் இணக்கமான அணுகுமுறையையும், திருவனந்தபுரம் சென்று, மாண்புமிகு கேரள முதலமைச்சருடன் நன்மை பயக்கும் பேச்சுவார்த்தை மேற்கொண்ட அவரது முயற்சியையும், நான் பாராட்டுகிறேன். இதன் தொடர்ச்சியாக, அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொண்டு, அதன் நீர்த்தேக்க அளவினை மீண்டும் 152 அடிக்கு உயர்த்த, தமிழ்நாட்டிற்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி, அணையை பலப்படுத்தும்

பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு 7.85 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இப்பணிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. எனவே, முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்துவதற்குத் தேவையான அனுமதிகளை கேரள அரசும், மத்திய அரசும் விரைவாக வழங்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

12) சென்னை குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நீரைத் திறந்து விடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சரிடம் கோரியதன் அடிப்படையில், சென்னைக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் செய்த இந்த உதவிக்காக, ஆந்திர அரசிற்கு இந்நேரத்தில் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

13) இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென,

தமிழ்நாடு அரசு மத்திய அரசினை வலியுறுத்தும். தமிழக மக்கள், எந்த ஒரு மதத்தையோ அல்லது சமயத்தையோ பின்பற்றினாலும், அவர்கள் அனைவரின் நலன்களும் பாதுகாக்கப்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யும்.

14) தமிழ்நாடு அரசு எடுத்த முனைப்பான நடவடிக்கைகளால், பாக் வளைகுடாவில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் குறைந்துள்ளது. இன்றைய நிலவரப்படி, 17 மீனவர்கள் மட்டுமே இலங்கை அரசின் சிறைக்காவலில் உள்ளனர். அவர்களையும் விரைவில் விடுவிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, விரைவில் சுமூகத்தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை மாநில அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

15) நிர்வாகத்தில் தூய்மையும், ஆளுமையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையும் உறுதி செய்வதுதான் இவ்வரசின் முதன்மையான நோக்கமாகும். 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக்ஆயுக்தா சட்டம் இயற்றப்பட்டு, அதன் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை நியமித்ததன் மூலம், தமிழ்நாடு லோக்ஆயுக்தா அமைப்பு செயல்படத் துவங்கியுள்ளது. 'அம்மா திட்டம்' மற்றும் 'வட்ட இணைய வழி மனுக்கள் கண்காணிப்பு அமைப்பு' மூலம் பொது மக்களின் குறைகள் விரைந்து தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் குறைகளைக் களையும் வகையில், ஒரு முன்னோடித் திட்டமாக 'மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்' கடந்த 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் துவக்கப்பட்டு, அதன் கீழ் 9.77 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 5.18 இலட்சம் மனுக்களுக்கு 40 நாட்களுக்குள்ளேயே மக்களுக்கு உதவும் வகையில் தீர்வு காணப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது. தென்காசி, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை,

திருப்பத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்கள் புதிதாகத் துவக்கப்பட்டதன் வாயிலாக, அரசு நிருவாகம் மக்களிடம் மேலும் நெருங்கிச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**16)** இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள எப்போதும் தயார் நிலையில் இருப்பதும், உடனடியாக நிகழ்விடத்திற்குச் சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை திறம்பட மேற்கொள்வதும், உயிர்களையும், உடைமைகளையும் காக்க உதவுகின்றன. 2030 ஆம் ஆண்டு வரையிலான மாநிலப் பேரிடர் மேலாண்மைக்கான முன்னோக்குத் திட்டம், ஒரு முழு சிறப்புக் காவல்படைப் பிரிவுடன் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு உருவாக்கம் உட்பட, ஆளில்லா விமானம் (Unmanned Aerial Vehicle) மூலம் எடுக்கப்படும் வான்வழி புகைப்படம், புவித் தகவல் அமைப்பு (Geographical Information System), உயர்தொழில்நுட்பத் தகவல் தொடர்பு மற்றும் மீட்புச் சாதனங்கள் பயன்பாடு இந்த தயார்நிலைக்கு பெரிதும் உதவியுள்ளன.

இயற்கைப் பேரிடர் காலங்களில் உயிரிழப்பு மற்றும் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுவதைக் குறைப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

17) தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டை ஊக்குவிப்பதில் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. 1956 இல், தமிழ்நாடு மாநிலம் உருவான நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் ஒன்றாம் தேதியை ‘தமிழ்நாடு நாள்’ என அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரை பாராட்டுகிறேன். 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் சிகாகோவில் நடைபெற்ற 10வது உலகத் தமிழ் ஆய்வு மாநாட்டுக்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததோடு, அமெரிக்காவிலுள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க 1 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. தமிழறிஞர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர்கள்

பேரில் விருதுகள் வழங்கியும், மணிமண்டபங்கள் நிறுவியும், ஆண்டுதோறும் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடியும், இந்த அரசு அவர்களை நினைவுகூர்ந்தும், அவர்களது சேவையை சிறப்பித்தும் வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம், 50.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

18) மகாத்மா காந்தியடிகளின் நினைவைப் போற்றிட, அவரின் 150–வது பிறந்த நாளினை இந்த ஆண்டு நாம் கொண்டாடி வருகின்றோம். ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட மோசமான வறுமை நிலையை இந்த உலகத்திற்கு உறுதிபட எடுத்துக் காட்டுவதற்கு, மகாத்மா காந்தி அவர்கள் அரையாடையுடன் மேல் துண்டை மட்டுமே அணியும் வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவினை, மதுரையில் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22–ஆம் நாளன்று எடுத்தார். இந்நிகழ்வினை நினைவூட்டும் வகையில்,

மதுரை அருகிலுள்ள காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தினை மேம்படுத்தி, அதனை ஊரக வளர்ச்சி மற்றும் காந்திய மெய்யியலுக்கான ஒப்புயர்வு கல்வி மையமாக உருவாக்க இந்த நேரத்தில் மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பாரத ரத்னா மூதறிஞர் இராஜாஜி அவர்களால் 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 இல், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் நிறுவப்பட்டது. மகாத்மா காந்தி அவர்கள் இருமுறை இந்த ஆசிரமத்துக்கு வருகை புரிந்துள்ளார். மகாத்மா காந்தி அவர்களின் 150 வது பிறந்த நாளின் நினைவாக, திருச்செங்கோட்டிலுள்ள காந்தி ஆசிரமத்தின் செயல்பாடுகளுக்கு உதவிடும் வகையில், இரண்டு கோடி ரூபாயை ஒருமுறை மானியமாக அளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. மகாத்மா காந்தியின் கொள்கையினை மேலும் பரப்பும் விதமாக, ஆசிரமத்தின் நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்க அரசு உதவும். 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாள் நடைபெற்ற தூய்மை பாரத விழாவில், தமிழகத்திற்கு ஊரகத் தூய்மை ஆய்வு–2019 இல், இந்திய அளவில் சிறந்த

மாநிலத்திற்கான விருது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.

**19)** தமிழ்நாட்டில் அருகி வரும் நீர் வளங்களை, மக்கள் பெருமளவில் நன்மையடையும் வகையில், பயன்படுத்திட வகைசெய்வது நமது புனிதமான கடமையாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'தமிழ்நாடு நீர்வள ஆதாரப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்' என்ற ஒரு இயக்கத்தை மக்கள் இயக்கமாகத் தொடங்கியுள்ளார். இதனால், ஏரிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், கால்வாய்கள் மற்றும் குளங்களை மக்களின் பங்களிப்போடு புனரமைப்பதற்கு செயல்படுத்தப்படும் குடிமராமத்து திட்டம் மேலும் உத்வேகம் அடைந்துள்ளது. **2016-17**ஆம் ஆண்டு முதல், இந்தத் திட்டத்தின் கீழ், **4,871** பணிகள் **931.76** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தியதன் காரணமாக, இந்த ஆண்டு பெய்த மழைப்பொழிவை, நீர்ப்பாசனம்,

குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டலுக்காக சேமித்து வைக்க முடிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி ஆற்றின் பெருமைமிக்க தூய்மையை மீட்டெடுக்கும் பொருட்டு 'நடந்தாய் வாழி காவேரி' என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். தமிழ்நாடு, தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாக இருப்பதால், அதன் நீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்கு, வடிநிலங்களுக்கு இடையே நதிநீரை மடை மாற்றம் செய்வது அவசியமாகிறது. இதன் முதல் கட்டமாக, கோதாவரி ஆற்றிலிருந்து குறைந்தபட்சம் 200 டிஎம்சி தண்ணீரையாவது காவேரி வடிநிலத்திற்கு வழங்க வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது. தமிழ்நாடு அரசு தன் பங்காக, தமிழ்நாட்டிற்குள் பாய்கின்ற நதிகளை இணைக்கும் பணியை மேற்கொள்ளும் விதமாக, காவேரி–குண்டாறு ஆறுகள் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும். இதில் முதல் கட்டமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னரே அறிவித்தவாறு, காவேரி–தெற்கு

வெள்ளாறு இணைப்புத் திட்டம் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

20) விவசாயிகளுக்கான நிலைக்கத்தக்க வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்காக, முன்னோடி தொழில்நுட்ப விரிவாக்கம், சந்தை ஒருங்கிணைப்பு, மதிப்புக் கூட்டு உற்பத்தி, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஊக்குவிப்பு மூலமாக இந்த அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது. இந்த ஆண்டு நிலவிய சாதகமான பருவமழை மற்றும் சிறந்த நீர் மேலாண்மையின் மூலம் கடைமடைப் பகுதி வரை பாசன நீர் சென்றடைந்ததால், பயிரிடும் பரப்பளவு 7 இலட்சம் ஏக்கர் வரை அதிகரித்துள்ளது. உணவு தானிய உற்பத்தி 115 இலட்சம் மெட்ரிக் டன் அளவு எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக 7,200 கோடி ரூபாய்க்கும் அதிகமாக தமிழ்நாட்டு விவசாயிகள் பெற்றுள்ளனர். வேளாண் உற்பத்திப் பொருட்களை ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு விற்பதற்கு ஏதுவாக, 'தமிழ்நாடு வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையச் சட்டம்–2019' இயற்றப்பட்டது. சர்க்கரைத் தொழிற்சாலைகள் கடுமையான இடர்பாடுகளை சந்தித்து வருவதால், கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதனைச் சரிசெய்ய, சர்க்கரை ஆலைகளின் நிதி மறுகட்டமைப்பு செய்ய வேண்டியது அவசியம் எனக் கருதி, தமிழ்நாட்டின் சர்க்கரை தொழிற்சாலைகளின் மறுமலர்ச்சிக்கு உதவும் வகையில் மத்திய அரசு சிறப்பு நிதிச் சலுகைகளை அறிவிக்க வேண்டும் என நான் வேண்டுகிறேன்.

21) கடந்த 2016–17 முதல் 2018–19 வரையிலான மூன்றாண்டுகளில், ஆண்டுதோறும் மாறா விலை அடிப்படையிலான மொத்த மாநில

மதிப்புக் கூட்டுதலில், வேளாண் துறை பங்களிப்பைவிட கால்நடைத் துறையின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள் மற்றும் நாட்டுக் கோழிகளின் விநியோகம் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் முன்னோடித் திட்டங்களின் வெற்றியே கால்நடைத் துறையின் இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு காரணமாகும். 2011 ஆம் ஆண்டிலிருந்து அரசு இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகளை நிறுவியுள்ளதன் மூலமும், சேலம் மாவட்டம், தலைவாசலில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ஒப்புதல் அளித்ததாலும், மாநிலத்தில் உள்ள மொத்தக் கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. கால்நடைத் துறைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சேலம் மாவட்டம் தலைவாசலில், 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை அறிவியல் ஆராய்ச்சிக்கான மேம்பட்ட ஒருங்கிணைந்த கல்வி நிறுவனம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில்

அடிக்கல் நாட்டவுள்ளார்கள். தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க, இந்தியாவின் பால் உற்பத்தி தொழில் துறையை பாதுகாக்கும் வகையில் ஆசியான் அமைப்பு மற்றும் பசிபிக் நாடுகளுடன் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (RCEP) கீழ் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திடாததற்கு நான் நன்றி கூறுகிறேன்.

22) பாக் வளைகுடாவில் இழுவை வலை மீன்பிடிப் படகுகளை, ஆழ்கடல் சூரை மீன்பிடிப் படகுகளாக மாற்றியமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி அளித்துள்ளதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மூக்கையூர் மற்றும் குந்துக்கல்லில் முறையே 120 கோடி மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மீன்பிடித் துறைமுகங்கள் கட்டும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வெள்ளப்பள்ளத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவுள்ளது. திருவொற்றியூர்குப்பம்,

தரங்கம்பாடி மற்றும் முதுநகரில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியிடமிருந்து இசைவு பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும், மாநிலத்தில் ஆழ்கடல் மீன்பிடிப்பை மேலும் ஊக்குவிக்கும்.

23) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம், பிற மாநிலங்களும் தொடர்ந்து பின்பற்றுவதற்கான முன்மாதிரியாக அமைந்துள்ளது. முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு, ஆதாருடன் இணைக்கப்பட்ட பொது விநியோக அமைப்பு நடைமுறைகளினால், ‘ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை’ திட்டத்தை தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்த முடிகிறது. இந்த ஆண்டு, நமக்கு சராசரி மழைப்பொழிவு இருந்தும், வேளாண் பெருமக்கள் அறுவடைக்காக காத்திருக்கின்றனர். விவசாயிகள் மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே நாடு செழிப்படையும். தமிழ்நாட்டு மக்கள் பொங்கல்

பண்டிகையை சந்தோஷமாகக் கொண்டாட, இந்த ஆண்டும் குடும்பம் ஒன்றிற்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளுடன் 1,000 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்கப்படும் என அறிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

**24)** மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தனையில் உதித்த, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–இல் உள்ள நோக்கங்களை நிறைவேற்றிடும் வகையில், தமிழ்நாட்டின் மனிதவள ஆதாரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளின் காரணமாக, உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளில் முதலீடு செய்வதற்கு மிகவும் உகந்த இடமாக நமது மாநிலம் உருவாகி வருகிறது. பன்முகப் பொருளாதாரம், எளிதாக தொழில் செய்தல், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் அரசு மற்றும் எளிதில் அணுகக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமை ஆகிய வலுவான அடிப்படைக் காரணிகளால், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு,

தொழில் முதலீட்டாளர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் அதிகளவில் தொழில் முதலீட்டினை ஈர்ப்பதற்கு நேரடிப் பொறுப்பேற்று, 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்குச் சென்றும், ஒற்றைச் சாளர அனுமதிகளை விரைவுபடுத்துவதற்கான உயரதிகாரக் குழுவிற்கு தலைமையேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். பெரும் வெற்றி பெற்ற 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாத உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக, 10.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 3,00,501 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதுவரை 53 திட்டங்களுக்கான தொழில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதோடு, 219 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பின்னர் 63 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு,

**19,136** கோடி ரூபாய் முதலீடு பெறவும், **83,837** புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**25)** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாட்டிலுள்ள தொழில்துறை வேலைவாய்ப்பிற்கு முதுகெலும்பாகத் தொடர்ந்து விளங்கி வருவதுடன், **21.53** இலட்சம் பதிவு பெற்ற நிறுவனங்கள் மூலம், **1.38** கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துவரும் ஜவுளித் துறைக்கு மேலும் ஊக்கமளிக்கவும், புதிய முதலீடுகளை ஈர்க்கவும், தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், திறனை மேம்படுத்தவும், 'தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை–**2019**' வெளியிடப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் புத்தொழில் தொடங்குவதற்கும், எளிதாக வணிகம் செய்வதற்கும், தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. **2019** ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட

“தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை”, தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையை பெரிதும் மேம்படுத்தியுள்ளது.

**26)** பொதுச் சேவைகள் அளிக்கப்படுவதை மேம்படுத்தவும், நிருவாகத்தில் மேலும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அரசு முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது. மாநிலமெங்கும் அகண்ட அலைவரிசை இணைய வசதிகளை அதிகரிப்பதற்கு, **1,815.31** கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாரத்நெட் திட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு மத்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது. இத்திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து **12,524** கிராம ஊராட்சிகளையும் இணைக்கும். இதன் அடுத்த கட்டமாக, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை இணைப்பதற்காக, தமிழ்நெட் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (Blockchain), பொருட்களின்

இணையம் (Internet of Things), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) அரசின் சேவைகளை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**27)** பெருமளவு வேலைவாய்ப்புகளை அளிக்கும் உந்துசக்தியாக சுற்றுலாத் துறை உள்ளது. இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மாநிலத்தில் உள்ள பெரிய மற்றும் பன்முக சுற்றுலா உள்ளாற்றலை, நீடித்த நிலையான வகையில் கொண்டு சென்று உறுதிப்படுத்திடவும், அதன் மூலம் உள்ளூர் வேலைவாய்ப்பினை உருவாக்கி, அப்பகுதி மக்களின் வளத்தினை மேம்படுத்திட, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்புத் திட்டம், 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், அரசு மற்றும் தனியார் பங்களிப்பின்

வாயிலாக, விரிவான பகுதி மேம்பாட்டு அணுகுமுறையைக் கடைப்பிடித்து உலகத்தரத்திலான உட்கட்டமைப்புகளுடன் ஆறு சுற்றுலா வட்டங்களில் (Tourism Circuits), **295** சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும்.

**28)** மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநிலம் முழுவதிலும் வசிக்கும் மக்கள் அனைவருக்கும், உலகத் தரத்திற்கு இணையான மிகச்சிறந்த உயர்தர உட்கட்டமைப்பை வழங்க வேண்டுமென்று 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**'–ல் குறிப்பிட்டிருந்தார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால், நல் ஆளுமைத் திறன் குறியீட்டில் பொதுக் கட்டமைப்பு வசதிகள் பிரிவில், நமது மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. குடிநீர் வழங்கல், சுகாதாரம், ஊரகப் போக்குவரத்து இணைப்பு, அனைத்து வீடுகளுக்கும் மாசில்லா சமையல் எரிபொருள்

வழங்குதல், அனைத்து இடங்களுக்கும் மின் இணைப்பு எளிதாகக் கிடைக்கச் செய்தல், தங்குதடையற்ற மின்சாரத்தை வழங்குதல் மற்றும் தனிநபர் மின் நுகர்வு அளவினை அதிகரித்தல் போன்றவை, நல் ஆளுமைத் திறன் குறியீட்டின் பொதுக் கட்டமைப்பு வசதிகள் பிரிவின் காரணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**29)** மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்கள், மின்பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றினார்கள். தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனானது கடந்த 8 ஆண்டுகளில் 31,426 மெகாவாட் அளவிற்கு உயர்த்தப்பட்டு, ஏறக்குறைய இருமடங்காக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் தொடர்வதில், இந்த அரசு அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. மேலும், 17,850 மெகாவாட் கூடுதல் மின்உற்பத்தித் திறனை நிறுவும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 13,319 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனைக்

கொண்டு, உலக அளவில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. பரவலாக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முறையில் **9,000** மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தியை இலக்காகக் கொண்டு 'சூரிய மின்சக்தி கொள்கை–**2019**' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

**30)** அனைத்துப் பகுதிகளையும் அடையும் தரமான சாலைத் தொடரமைப்பு குறித்து தமிழ்நாடு என்றென்றும் பெருமை கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலை தொடரமைப்பு தொடர்ந்து தரம் உயர்த்தப்படுவதையும், சாலை இணைப்புகளை தொடர்ந்து மேம்படுத்துவதையும், சாலைப் பாதுகாப்பினை அதிகரிப்பதையும் இந்த அரசு உறுதி செய்து வருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் **6,448** கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தினால் பயனடையக்கூடிய பகுதியில் சாலைத் தொடரமைப்பை

தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 2,673.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில், எண்ணூர் துறைமுகத்திலிருந்து தச்சூர் வரையிலான சென்னை வெளிவட்டச் சுற்றுச் சாலை திட்டத்தின் முதற்கட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இச்சாலையின் மீதமுள்ள பகுதிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக, 2016 ஆம் ஆண்டில் 71,431 ஆக இருந்த சாலை விபத்துகளின் எண்ணிக்கை, 2018 ஆம் ஆண்டில் 63,923 ஆகவும், சாலை விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 16,092 லிருந்து 2018 ஆம் ஆண்டில் 11,378 ஆகவும் கணிசமாகக் குறைந்துள்ளது. சாலை விபத்துகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 2010 ஆம் ஆண்டில் 10,000 வாகனங்களுக்கு சராசரியாக 12 ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டில் இது, மூன்றாகக் குறைந்துள்ளது.

**31)** மாநிலத்தின் மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் அளிக்கப்பட்டுள்ள தரமான பேருந்துப் போக்குவரத்து வசதி, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. நாளொன்றுக்கு 1.63 கோடி பயணிகள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பொதுப் போக்குவரத்துப் பயணிப்பின் பங்கை மேலும் அதிகரிப்பதில் அரசு உறுதியாக உள்ளது. நம் மாநிலத்தில், பேருந்துப் போக்குவரத்துக் கட்டணங்கள் நாட்டிலேயே குறைவாக இருக்கின்ற போதிலும், போக்குவரத்து செயல்திறனை எவ்விதத்திலும் நாம் விட்டுக்கொடுப்பதில்லை. இதற்குச் சான்றாக, 2016–17 ஆம் ஆண்டில், மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் செயல்பாட்டுத் திறன் அளவீடுகளுக்கான 11 விருதுகளையும், 2017–18 ஆம் ஆண்டில் 9 விருதுகளையும் தமிழ்நாட்டின் 8 மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் வென்றுள்ளன. இந்திய அரசின் FAME-II திட்டம் மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன்,

மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் மின்சார வாகனங்களை பெருமளவில் இயக்கவுள்ளன.

**32)** சென்னை மெட்ரோ இரயில் வேகமாக வளர்ந்து, சென்னை மாநகருக்குப் பெருமை சேர்க்கின்றது. 45 கிலோமீட்டர் நீளத்திற்கான சென்னை மெட்ரோ இரயிலின் முதற்கட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையிலான முதற்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் 2020 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும். மேலும் 69,180 கோடி ரூபாய் செலவில் 118.9 கிலோமீட்டர் நீளத்திற்கு மூன்று வழித்தடங்களை அமைக்கும் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டாம் கட்டப் பணியில், 52.01 கிலோமீட்டர் நீளத்திற்கு நிதியுதவி அளித்திட ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்து, முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இரண்டாம் கட்டத்தின் மீதமுள்ள வழித்தடங்களுக்காக, ஆசிய வளர்ச்சி வங்கி,

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டத்தில், 50 சதவீத பங்குமூலதனத் தொகையை மத்திய அரசு வழங்கியதைப் போலவே, இரண்டாம் கட்ட திட்டத்திலும் 50 சதவீதம் பங்களிப்பிற்கான ஒப்புதலை விரைவில் வழங்குமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன். சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில், சென்னை விமான நிலையத்திலிருந்து, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமையவிருக்கும் கிளாம்பாக்கம் வரையிலான 15.3 கிலோமீட்டர் தூரத்திற்கு, மெட்ரோ இரயில் வழித்தடத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. தாம்பரம்–வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு, 15.5 கிலோமீட்டர் நீளத்திற்கு இரயில் போக்குவரத்து முறை ஒன்றினை அரசு அமைக்கும். இதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தயாரிக்கும்.

**33)** எதிர்காலத்தில் அனைத்துவகை போக்குவரத்து வழிமுறைகளையும் ஒருங்கிணைப்பது அவசியமாகும். 'சென்னைப் பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து ஆணையச் சட்டம்' (CUMTA) இயற்றப்பட்டு, அதற்குண்டான விதிகளும் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 'சென்னை மாநகரக் கூட்டாண்மை' என்ற தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டத்தை உலகவங்கியின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. அதிகாரம் பெற்ற சென்னைப் பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முகப் போக்குவரத்து ஆணையத்தின் மூலமாக, சென்னை நகரின் பல்வேறு போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கு தடையற்ற போக்குவரத்தினை வழங்குவதை ஒரு முக்கிய இலக்காக இத்திட்டம் கொண்டுள்ளது.

**34)** இந்தியாவிலேயே அதிக நகரமயமாக்கப்பட்ட பெரிய மாநிலமாக தமிழ்நாடு

திகழ்கிறது. எனவே, தரமான நகர்ப்புர உட்கட்டமைப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது. சீர்மிகு நகரங்கள் திட்டம் (SMART Cities), அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) போன்ற மத்திய அரசின் திட்டங்களுடன், பதினான்காவது நிதி ஆணையத்தின் வாயிலாகப் பெறப்பட்ட மானியங்கள், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி பெறப்படும் நிதிப் பகிர்ந்தளிப்பு ஆகியவை தவிர, கூடுதலாக ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் சென்னைப் பெருநகர மேம்பாட்டு இயக்கத்தின் வாயிலாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களை மாநில அரசு பெருக்குகிறது. உலக வங்கி நிதி உதவி அளிக்கின்ற தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளிக்கின்ற தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டம் போன்ற பன்னாட்டு நிதி உதவியின் வாயிலாக, நகர்ப்புர உட்கட்டமைப்புத் தேவைகளை

பூர்த்தி செய்வதற்காக கூடுதல் நிதி ஆதாரங்கள் உறுதி செய்யப்படுகின்றன.

**35)** அடிப்படைத் தேவையான வீட்டுவசதியை அனைவருக்கும் அளிக்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. ஊரகப் பகுதிகளில், முதலமைச்சரின் சூரியஒளி எரிசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், **2011–12** ஆம் ஆண்டிலிருந்து இதுவரை **3,80,000** வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்திரா வீட்டு வசதித் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், **2011–12** ஆம் ஆண்டு முதல், இதுவரை, **9,69,189** வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புரப் பகுதிகளில் தரமான வீடுகளின் பற்றாக்குறையைப் போக்க, தமிழ்நாடு அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிரதம மந்திரியின் நகர்ப்புர வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், **31,252.95** கோடி ரூபாய் மொத்தத் திட்ட மதிப்பீட்டில், **6.94** இலட்சம் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசால்

அறிவிக்கப்பட்ட பொதுக் கட்டட மற்றும் வளர்ச்சி விதிகள், இயலக்கூடிய விலையில் வீடுகளை வாங்குவதற்கு உத்வேகத்தை அளித்துள்ளன.

**36)** பல முக்கிய சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் காரணமாக, குழந்தைகள் இறப்பு விகிதம், தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் சராசரி ஆயுட்காலம் ஆகிய சுகாதாரக் குறியீட்டு இலக்குகளை எட்டுவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் ஒத்த தேசிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, பிரதம மந்திரி ஜன ஆரோக்கியா யோஜனா திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடனும், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துடனும் இணைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரையில்

**40.16** இலட்சம் நபர்களுக்கு **6,487.82** கோடி ரூபாய் செலவிலான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு, உயர் அறுவை சிகிச்சைகளுக்காக **8,513** நபர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது**.** டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன்குனியா போன்ற கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் விலையில்லா கொசுவலைகள் விநியோகிக்கப்படும்**.**

**37)** சுகாதாரத் துறையில் மனிதவள ஆதாரங்களை மேம்படுத்துவது அரசின் முக்கிய இலக்காக உள்ளது**.** மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது, மறைந்த முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும்**.** அவர் காட்டிய வழியில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில், இராமநாதபுரம், விருதுநகர்,

நீலகிரி, திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் **9** புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான பணிகள் **3,267.25** கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைக்க விரைவாக இடங்களைத் தேர்வு செய்ததாலும், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாலும் இத்தனை மருத்துவக் கல்லூரிகளைப் பெறுவது சாத்தியமானது.

**38)** உலகத்தரம் வாய்ந்த மனிதவளத்துடன் கூடிய அறிவார்ந்த எழுச்சிமிகு சமுதாயத்தை உருவாக்குவதே தமிழ்நாட்டின் நோக்கமாகும். அரசின் தொடர் நடவடிக்கைகளின் பயனாக, மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கை விகிதாச்சாரம் **49.3** சதவீதம் என்ற அளவில், மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்லும் வசதிகளை எளிதாக்கி, உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக புதிய கல்லூரிகளைத்

தொடங்குவது, புதிய படிப்புகளைத் தொடங்கியது, கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட முதலீடுகளைச் செய்வது, புதிய ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிப்பது, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது போன்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தை ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனமாக (Institution of Eminence) இந்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், மாநிலச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாநில பொதுப் பல்கலைக்கழகமாக இருந்து வருவதன் காரணத்தால், ஒப்புயர்வு உயர்கல்வி நிறுவனம் என்ற தகுதி நிலையை அடைந்த பின்னரும்கூட, தொடர்ந்து மாநிலச் சட்டத்தின் கீழ் இயங்கும் என்றும், மாநில இட ஒதுக்கீட்டுக் கொள்கை தொடர்ந்து அதற்குப் பொருந்தும் என்றும் இந்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்வதற்காக, மாண்புமிகு அமைச்சர்கள் ஐவரைக் கொண்ட ஒரு குழுவை, அரசு அமைத்துள்ளது.

அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய முடிவு எடுக்கப்படும்.

**39)** தமிழ்நாடு அரசு, தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மாணவர்களுக்கு தேவைப்படும் தரமான உட்கட்டமைப்பு, சத்துள்ள மதிய உணவு, போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள், தரமான கற்பித்தலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, நூறு விழுக்காடு சேர்க்கை, மாணவர்களைத் தக்க வைத்தல் போன்றவை உறுதி செய்யப்பட்டு வருகின்றன. கல்வியின் தரத்தை தொடர்ந்து பாதுகாக்கும் வகையில், நவீன கருத்துகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை தொடர்ந்து திருத்தியமைத்துப் புதுப்பிக்கும் பணியை அரசு செய்து வருகிறது. விரைவுத் தகவல் குறியீடுகளைக் கொண்ட தொழில்நுட்ப பயன்பாடு (QR), ஒலி–ஒளி பாடத்திட்ட விளக்கப்படங்கள், தமிழ்நாடு ஆசிரியர்கள் இணையதளம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக

24 மணி நேரமும் ஒளிபரப்பப்படும் ‘கல்வி’ தொலைக்காட்சி வாயிலாக, செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்.கே.ஜி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான வகுப்புகளுடன் மாதிரி தொகுப்பு பள்ளிகளை செயல்படுத்தும் திட்டமானது, தற்போது மாநிலத்திலுள்ள 120 அரசுப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

40) பல்வேறு தொழிற்சாலைகளுக்கு திறன் மேம்பட்ட பணியாளர்கள் கிடைப்பதற்கு ஏதுவாக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், திறன் இடைவெளிகளை அறியும் ஆய்வினை செய்து, அனைத்து மாவட்டங்களுக்கும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி உள்ளது. இந்த அணுகுமுறை, தொழில்துறை வேலைவாய்ப்புக்கு உகந்த திறன் மேம்பாட்டினை மையப்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு திறன்மிக்க மனிதவள ஆற்றல் கிடைப்பதை உறுதிசெய்யும். தானியங்கி மற்றும் தானியங்கி கூறுகளைக்கொண்ட

இயந்திரக் கருவிகள்; சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு; பொருட்கள் நகர்வு மேலாண்மை ஆகிய மூன்று துறைகளில், உச்ச திறன் மேம்பாட்டு மையங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதைப் போன்று, கட்டுமானப் பிரிவிலும், வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுப் (BFSI) பிரிவுகளிலும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட உள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்ககத்தின் கீழ், ஒரு சிறப்பு முயற்சியை அரசு தொடங்கி, கல்லூரி இடைநிற்றல் மாணவர்களில் ஒரு இலட்சம் நபர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்படும். இதனால் அவர்கள், தங்கள் உயர்கல்விப் படிப்பினை நிறைவு செய்யலாம் அல்லது உரிய வேலைவாய்ப்பினைக் கண்டறியலாம்.

41) 2019 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல், ‘ஒரு முறை மட்டுமே பயன்படுத்தி எறியக்கூடிய நெகிழிகளைத்’ தடை செய்ததற்காக தமிழ்நாடு அரசு உலகளாவிய பாராட்டினைப் பெற்றுள்ளது. நெகிழிகள்

தடை செய்யப்பட்டதற்கு மாநிலத்திலுள்ள மக்கள் தாமாகவே மனமுவந்து ஆதரவு அளித்ததுடன் நெகிழிகளின் பயன்பாட்டினையும் பெருமளவு குறைத்துள்ளனர். நெகிழிகளை தடை செய்வதிலும், அதனை தீவிரமாகச் செயல்படுத்துவதிலும் அதற்கான மாற்றுப் பொருட்கள் பயன்பாட்டினை ஊக்குவிப்பதிலும் அரசு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. பசுமைச் சூழல் நிதி மற்றும் தேசிய பருவநிலை மாற்றத் தழுவல் நிதியின் கீழ், **4,682** கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்களுக்கான கருத்துருக்களை மத்திய அரசிடம் இந்த அரசு அனுப்பியுள்ளது. இந்தக் கருத்துருக்களுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசினை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**42)** விளையாட்டை மேலும் பரந்த தளத்திற்கு எடுத்துச் செல்வதும், விளையாட்டுக் கலாச்சாரத்தை மேலும் வளர்ப்பதுமே இந்த அரசின் குறிக்கோளாகும். அம்மா இளைஞர் விளையாட்டு திட்டத்தின் கீழ்,

அனைத்து கிராமங்கள் மற்றும் பேரூராட்சிகளில் இளைஞர் மன்றங்கள் அமைக்கப்பட்டு, தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டு மைதானங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுவதன் வாயிலாக, விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பது மட்டுமல்லாமல், இளைஞர்களின் ஆற்றலை சரியான வழியில் நெறிப்படுத்த முடியும். பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுகளில் பதக்கம் வென்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத்தொகை வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டமும், வேலைவாய்ப்பில் மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் கொள்கையும், மாநிலத்திலுள்ள விளையாட்டு வீரர்களை பெரிதும் ஊக்குவித்து வருகின்றது.

**43)** கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் வாயிலாக, பெண்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு

முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சென்னை மாவட்டம் நீங்கலாக, மாநிலத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற வறுமை ஒழிப்புக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்ற சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் சமூக–பொருளாதாரப் புரட்சிக்கு வித்திடும் வகையில் அமைந்துள்ளன. 2019–20 ஆம் ஆண்டில், மாநிலத்திலுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு 12,500 கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

44) திருமண உதவித் திட்டங்கள், தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ‘பெண் குழந்தையைக் காப்போம்; பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்’ ஆகிய திட்டங்கள் உட்பட பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தியதன் விளைவாக,

கடந்த மூன்று ஆண்டுகளில், குழந்தைப் பிறப்பில் பாலின விகிதம் **917** என்ற அளவிலிருந்து **943** ஆக அதிகரித்துள்ளது. பொது மற்றும் தனியார் இடங்களில் வன்முறைக்கு ஆளாகும் சூழ்நிலைகளை சந்திக்க நேரிடும் பெண்களுக்கு **24** மணி நேரமும் உடனடியாக உதவி கிடைப்பதை தமிழ்நாடு உறுதி செய்துள்ளது. பெண்கள், எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல், பாதுகாப்பாக உணரச் செய்வதில், 'காவலன்' செயலி பெரும் வெற்றி பெற்றுள்ளது. குழந்தை நலனை குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தியதற்காக, **2018–19** ஆம் ஆண்டுக்கான 'தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின்' கீழ் வழங்கப்பட்ட விருதுகளில், 'ஒட்டுமொத்த சிறந்த செயல்பாடு' மற்றும் 'திறன் மேம்பாடு' பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

**45)** மூத்த குடிமக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஒரு மக்கள் நல அரசின் முக்கியக் கடமையாகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகையில்

மூத்த குடிமக்களின் விகிதாச்சாரம் உயர்ந்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கிடும் ஐந்து சமூகப்பாதுகாப்புத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை 29.80 இலட்சம் ஆகும். நடப்பாண்டு முதல், தகுதி வாய்ந்த மேலும் 5 இலட்சம் நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். சமூகப் பாதுகாப்பு / முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வறுமை நிலையைக் கணக்கிடுவதற்கான அளவுகோலை இந்த அரசு தளர்த்தியுள்ளது. அதன்படி, பயனாளிக்குச் சொந்தமான அசையாச் சொத்து மதிப்பின் வரம்பு 50,000 ரூபாயிலிருந்து 1,00,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அசையாச் சொத்தின் வரையறையில், இலவச வீடு வழங்கிடும் திட்டத்தில் அரசிடமிருந்து பெறப்பட்ட வீடு சேர்க்கப்பட மாட்டாது.

**46)** ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட சமூகத்தில் பின்தங்கிய பிரிவுகளில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பையும், உரிமையையும் வழங்கி, அனைவரையும் அரவணைக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதையே தமிழ்நாடு அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களுக்கு, கல்விக்கான வாய்ப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு திட்டங்கள் கவனமாகத் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும்

சிறுபான்மையினரின் பொருளாதார முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**47)** சமூக நீதியை காப்பதில் உறுதி கொண்டுள்ள இந்த அரசு, ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கென மாநிலத்தில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாகப் பாதுகாக்கும். வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான 4 சதவீத இட ஒதுக்கீடு உறுதி செய்யப்படுவதுடன், அனைத்து நிலைகளிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அவர்களுக்குத் தகுந்த பணியிடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன.

**48)** மாநில அரசின் முன்னுரிமைக் கொள்கைகளையும், அவற்றின் செயலாக்கத் திட்டங்களையும் இங்கு எடுத்துரைத்துள்ளேன். கருத்துகளை அலசி ஆலோசிக்கும், மாநிலத்தின்

மிக உயரிய மக்களாட்சி அமைப்பான இந்த மாமன்றம், என்னுடைய உரையில் அடங்கியுள்ள கருத்துகளை ஆராய்ந்து, ஆக்கபூர்வமாக விவாதிக்க உள்ளது. இந்த விவாதங்கள் மக்களின் நலனையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த சமூக–பொருளாதார மேம்பாட்டையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். இந்தக் குறிக்கோளுடன், நீங்கள் ஒவ்வொருவரும் உங்களின் உயரிய பங்கினை இந்தப் பேரவைக்கு அளிப்பீர்கள் என உறுதியாக நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும், 2020 ஆம் ஆண்டு மகிழ்ச்சிகரமாகவும், வளமானதாகவும் அமைய எனது வாழ்த்துகளையும், பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**